**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**STC.NO- 264/2024**

**PW1 - Recall**

| | | | |
|---|---|---|---|
| Name | ராதா | Age: | 42 |
| Husband name | சசிக்குமார் | Calling: | டெயிலர் |
| Village | கந்தர்வக்கோட்டை | Taluk | கந்தர்வக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.10.2025

( எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.ப.மனு எண். 376/2025 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7) எனது திருமண தேதி என்ன என்றால் 16.05.2008 ஆகும். எதிரி என்னிடமும், அருகில் இருந்த எனது குடும்ப சொத்து மற்றும் இதர பங்காளிகள் சொத்தினையும் கிரையம் பெற்று, மனைப்பிரிவுகளாக பிரித்து விட்டார் என்றால் சரிதான். நான் எதிரிக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் இடம் நான் எனது தாயார் பரமேஷ்வரியிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் என்னால் எனது தாயாரிடம் இருந்து கிரையம் பெறப்பட்ட ஆவணம் ஆகும். **(மேற்படி 01.09.2009 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக கணினி சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி ஆவணத்தில் எனது கணவர் சாட்சிக்கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் மூலமாக, புல எண் 235/5 இல் 21 ஏர்ஸ்–இல் 4 1/2 ஏர்ஸ்–ம் புல எண் 235/6 இல் 21 ஏர்ஸ்–இல் 7 ஏர்ஸ்–ம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான், மொத்தம் 28 சென்ட் கிரையம் ஆகும்.

8) கிரையம் பெற்ற பிறகு உட்பிரிவு செய்து, பட்டாவை எனது பெயருக்கு மாற்றி தான் எதிரிக்கு விற்பனை செய்தேன் என்றால் சரிதான். 9.11.2010 ஆம் தேதியில், நான் எதிரிக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தை ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் நாளது தேதியில் கிரையம் பெறும் மைதீன் புன்செய்க்கும் தெற்கு என்று நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மைதீன் தான் ஆவணத்தை தயார் செய்து கொடுத்தார். நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில், எனது தாயாரிடம் இருந்து, எனது சொத்திற்கு வடக்கில் உள்ள சொத்தை எதிரி கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 09.11.2010 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் எனது கணவருடையது என்றால் சரிதான். அந்த ஆவணம் எதிரிக்கு எனது தாயார் எழுதிக்கொடுத்தது என்றால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எழுத, படிக்க தெரியும். மேற்படி ஆவணம் எனது தாயாரால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றாலும் நான் அதனை தெரிந்து கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ம.சா.ஆ.7 ஆவணம் எழுதிக்கொடுத்த போது, சார்பதிவாளர் கிரையத்தொகையை பெற்றுக்கொண்டீரா என்று கேட்டாரா என்றால் இல்லை. மேற்படி கிரையம் செல்லாது என கோரி புகாரோ, வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் கசோலை கொடுத்ததால் இந்த வழக்கை தான் தாக்கல் செய்துள்ளேன். காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதி, 23.10.2015 என்றால் தேதி தெரியவில்லை 10 ஆம் மாதம் கொடுத்தார்.

9) நானும் எனது குடும்பத்தாரும் எதிரிக்கு கிரையம் கொடுத்தது போக, அந்த இடத்தில்,புல எண் 235/5 இல் 21 ஏர்ஸ்–இலும் 235/6 இல் 21 ஏர்ஸ்–இலும் எங்கள் குடும்பத்திற்கு இடம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, எனக்கு உள்ளது. அது எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் நான் எனது சகோதரியிடம் இருந்து செட்டில்மெண்ட் ஆவணம் வாங்கியுள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் தான செட்டில்மெண்ட் ஆவணம் எனது சகோதரியால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். **( மேற்படி 14.02.2019 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி ஆவணத்தின் மூலம் 2 புல எண்களில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சமூகம் நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் தான் மேற்படி ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தில், இணைக்கப்பட்டுள்ள நீதிமன்ற தீர்ப்பாணையில், ஒரு புல எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில், ஒரு புல எண்ணை பொறுத்து, ரத்து செய்ய சொல்லியுள்ளார்கள். மேற்படி தீர்ப்பின் சாராம்சம் என்ன என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் ஏற்பட்ட தேதியில், மேற்படி தீர்ப்பு ரத்து செய்யப்பட்டுவிட்டது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, தெரியாது.

10) தமிழரசி என்பவர் என் மீதும் எதிரி மற்றும் எனது சகோதரி மீதும் அசல் வழக்கு எண் 27/2021 என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மாணிக்கம் என்பவர் என் மீதும் எதிரி மற்றும் எனது சகோதரி மீதும் அசல் வழக்கு எண் 18/2020 என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இதே சொத்து சம்மந்தமாக மற்ற நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது சகோதரியிடம் இருந்து வாங்கிய சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். காசோலை கொடுத்த சொத்திற்கும் அதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. நானும் எனது குடும்பத்தாரும் எதிரிக்கு சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டு மோசடியாக எதிரி மீது இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடமும் எனது குடும்ப உறுப்பினரிடமும் வாங்கி, விற்பனை செய்த நபர்களிடம் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். அவர்களிடம் நான் பிரச்சினை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி வழங்கியதாக சொல்லப்படும் காசோலையில், எதிரி கையொப்பமிட்டு கொடுத்தார் என்ற விபரத்தையும் காசோலை யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்ற விபரத்தையும், காசோலை எவ்வளவு தொகைக்கு வழங்கப்பட்டது என்ற விபரத்தையும், அறிவிப்பிலும் புகார் மனுவிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

11) எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில், எதிரியிடம் பணம் இல்லை என்பதால் தான் காசோலை பெற்றேன் என்றால் சரிதான். அந்த காசோலை முன்தேதியிட்டு, வழங்கப்படவில்லை என்றால் சரிதான். நான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பாக, நான் எதிரியிடம் பணம் கேட்டதாக அறிவிப்பிலும் புகார் மனுவிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலைகளில் உள்ள எழுத்துக்கள் வெவ்வேறானவை என்றால் சரியல்ல, ஒரே நபர் எழுதியது தான். இரண்டும் வேறு வேறு கையெழுத்துக்கள் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.6 இல் உள்ள கையொப்பமும் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 இல் உள்ள கையொப்பமும் வேறு வேறாக உள்ளது என்றால் சரிதான். நான் எதிரிக்கு முறையாக சட்ட அறிவிப்பு எதுவும் சார்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் மனுவில் செய்துள்ள கையொப்பத்தின் கையெழுத்தும் வழக்கு காசோலையில் உள்ள ராதா என்ற கையெழுத்தும் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சரியல்ல.

12) ம.சா.ஆ.7 இல் உள்ள கையொப்பமும் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 இல் உள்ள கையொப்பமும் வேறு வேறாக உள்ளது என்றால் சரிதான், எதிரி எனது முன்னிலையில் தான்

காசோலைகளில் கையொப்பம் செய்தார், அவர் மாற்றி மாற்றி கையொப்பம் செய்துள்ளது குறித்து எனக்கு தெரியாது. பஞ்சாயத்து எங்கு நடைபெற்றது என்பதை எனது அறிவிப்பிலும் புகார் மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான், முகமது மைதீன் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. தஞ்சாவூரில் உள்ள அலுவலகத்தில் வைத்து தான் நடைபெற்றது என்றால் சரிதான். யார் யார் பஞ்சாயத்தில் கலந்து கொண்டார்கள் என்ற விபரத்தை அறிவிப்பிலும் புகார் மனுவிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். பஞ்சாயத்து செய்த நபர்களை சாட்சியாக அழைக்க முடியுமா என்றால் ஒரு சில நபர்களை அழைக்கலாம். என் மீதும் பஞ்சாயத்து செய்த நபர்கள் மீதும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காவல் நிலையத்தில் எதிரி புகார் அளித்தாரா என்றால் சரிதான். நான் 08.01.2016 ஆம் தேதியில் 20 அடியாட்களுடன் எதிரியின் அலுவலத்திற்கு சென்று வழக்கு காசோலைகளை எடுத்து வந்துவிட்டேன் என்றாலும் அந்த காசோலைகளை, 11.01.2016 ஆம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

13) என்னாலும் எனது தாயாராலும் ஏற்கனவே எதிரிக்கு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து, எனது சகோதரி மூலமாக எதிரி மீது பொய்யாக சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி கிரைய ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட தேதியில், எங்களுக்கு உரிய மறுபயன் தொகையை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டவுடன் விலை அதிகமானதால், எதிரியிடம் பணம் கேட்டு, வீண் தகராறு செய்துவந்தோம் என்றாலும் அதன் அடிப்படையில், 08.01.2016 ஆம் தேதியில் தஞ்சாவூர் பாஸ்கரபுரத்தில் உள்ள எதிரியின் அலுவலகத்தில், அடித்து உடைத்து வழக்கு காசோலைகளை எடுத்து வந்தேன் என்றாலும் அதனால் தான் எதிரி புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. விகிதாச்சார இலாபத்தொகை கொடுக்கப்படவில்லை என்று புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**